<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP. No.88/2024</u>

RW : 1

2026 ஆம் ஆண்டு மே மாதம் 26 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | S. வித்யா | த / பெ. | : | திரு. சேகர் |
| கிராமம் | : | பந்தநல்லூர் | தாலுக்கா | : | திருவிடைமருதூர் |
| தொழில் | : | இளநிலை உதவியாளர் | வயது | : | 23 |

**<u>26.05.2026</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் தரப்பினர் இல்லை. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றதின் பேரில் இன்று இவ்வழக்கில் முன்னிலையாகி எதிர்மனுதாரர் சாட்சி 1 ஆக சத்திய பிரமாணத்தின் பேரில் நான் அளிக்கும் முதல் விசாரணை வாக்குமூலம்.

நான் திருவாரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிகிறேன். இவ்வழக்கில் சாட்சியமளிக்க எனக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த **அங்கீகாரம் கடிதம் சாட்சி சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.618/2023 வழக்கில் சம்பந்தப்பட்ட TN 51 AP 3496 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் **மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் சான்று நகல் கொண்டு வந்துள்ளேன் அது சாட்சி சான்றாவணம் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அந்த சாட்சி சான்றாவணம் 2 ல் காலம் 7 ல் ஓட்டுநர் விவரத்தில் மணிமாறன், த/பெ. குப்புசாமி ஓட்டுநர், உரிமையாளர் மணிவண்ணன், த/பெ. குப்புசாமி 8 ம் காலத்தில் ஓட்டுநர் உரிம விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. விபத்தின் போது அவருக்கு சரியான ஓட்டுநர் உரிமம் உள்ளது. என குறிப்பிடப்பட்டுள்ளது. காலம் 10

ல் Period of validity of permit விவரங்கள் எதுவும் கொடுக்கவில்லை. அதனால் உரிய permit இல்லாத வாகனம்.

மேலும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 50 L 7854 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் **மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் சான்று நகல் கொண்டு வந்துள்ளேன் அது சாட்சி சான்றாவணம் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அந்த சாட்சி சான்றாவணம் 3 ல் காலம் 6 மற்றும் 7 ல் இருசக்கர வாகனத்தில் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் பெயர் ராஜேந்திரன், த/பெ.ராமையா பிள்ளை என்றும், காலம் 8 ம் ஓட்டுநர் உரிம விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. விபத்தின் போது அவருக்கு சரியான ஓட்டுநர் உரிமம் உள்ளது.

**குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.05.26 16:04:09 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்